



# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 17 7.05.2026



ஶ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## பரமபதசோபானம்

*9-படிகளாவன:-*
*(1) தத்துவங்கள் முதலிய வற்றை வகுத்து அறிதல்*
*(2) மனந்தளர்தல்*
*(3) உலகஸுகங்களில் ஆசையறுதல்*
*(4) தம் பாபங்களின் மிகுதியால் இனி வரக்கிடக்கும் நரகா நுபவம் முதலிய துன்பங்களுக்கு அஞ்சுதல்*
*(5) எம்பெருமான் மோக்ஷத்தை அருள்வதற்குக் காரணமான உபாயத்தை அநுஷ்டித்தல்*
*(6) இச்சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல்*
*(7) அர்ச்சிராதிமார்க் கத்தால் செல்லுதல்*
*(8) ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்யலோகத்தைச் சேர்தல்*
*(9) அங்கு ஸர்வேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்து அனுபவித்து அந்த ஆநந்தத்திலேயே மூழ்கிக்கிடத்தல்.*
*இந்த 9-விஷயங் களையும் இப்பிரபந்தத்தில் சுருக்கியும், ரஹஸ்யத்தில் மிக விரித்தும் அருளியிருக்கிறார் ஸ்ரீ தேசிகன்.*
**************************************************************

பின் இதழிலிருந்து தொடர்ச்சி.

*அளவற்ற சேனையையுடையவராய்ப் பல சிற்றரசர் தம் அடிபணியுமாறு நின்று இவ்வுலகத்தை முன் ஆண்ட மநு மாந்தாதா முதலிய சக்ரவர்த்திகள் இப்பொழுது எங்கே? அனைவரும் இறந்தொழிந்தனர். அவ்வாறே நக்ஷத்ரங்கள், சந்த்ரஸூர்யர்கள், இந்த்ரன், சிவன், ப்ரஹ்மா முதலிய அனைவரும் இல்லாமற்போகுங் காலமும் ஒன்று உண்டு. அதுவே மஹாப்ரளயமெனப்படும். அப் பொழுதும் அழியாது நிற்பது எம்பெருமானது ஸ்தாநமாகிய பரமபதம் ஒன்றேயாம். அறிவாளிகள் இதன் பெருமையை ஆராயுங்கால் ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள் நரகமேயென்று நரகமேயென்று நினைத்து ஸம்ஸார ஸுகத்தை வெறுப்பார்கள். இவ்வாறு வெறுப்படைவதே மூன்றாம் படியாகும்*

**************************************************************

ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுவதற்குச் சாதநமான சிறந்த தர்மங்கள் நிவ்ருத்திதர்மங்கள் எனப்படும். அவற்றையே கைக்கொள்பவர்கள் ஸம்ஸாரத்திற்கு அஞ்சாத முருடர்களுடன் பழக மாட்டார்கள். ஆதலின் நாம் முமுக்ஷு க்களுடனேயே கலந்து பரிமாறினோம். நம்மைப் பாபமார்க்கத்திலிருந்து விலக்கி அஜ்ஞா நத்தை ஒழித்த ஆசார்யர்களின் கடாக்ஷத்தால் ஸ்ரீவைகுண்டத்திலும் பசுநிரை மேய்த்தலை உவக்கும் கண்ணபிரானது கைங்கர்யத்தையே விரும்பும் மனவுறுதியைப் பெற்றோம்.

**************************************************

ஸம்ஸாரிகளான சேதநர் இதுகாறும் அநுபவித்த துக்கங்களுக்கு அளவில்லை. இன்னும் வரப்போகும் துன்பங்களுக்கும் எல்லையில்லை. இவ்வாறு கர்மங்களாகிய பெரிய அக்னி மேன்மேலும் துன்பத்தைத் தந்துகொண்டே சேதநர்களை விறகாகக்கொண்டு எரித்துக்கொண்டிருக்கிறது. இங்ஙனமே சேதநர்கள் இந்த ஸம்ஸார மாகிய படுகுழியில் கிடந்துழல்கின்றனர். இதற்கு அஞ்சிய கூரறி வினரான சிலர் எம்பெருமான் விதித்த கட்டளையை ஏற்றுத் தமது இழிநிலையை நீக்க முற்பட்டுத் தம் கர்மங்கள் முழுதும் நீங்குவதற்கு வேதங்களில் கூறிய பக்தி-ப்ரபத்திகளுள் ஒன்றில் ஈடுபடுவர். இங்ஙனம் ஸம்ஸாரத்திற்கு அஞ்சுவதே நான்காம் படியாகும்.

**************************************************

கர்ப்பவாஸம் முதலிய ஸம்ஸார துக்கங்களை ஒழிக்கக் கருதும் பாகவதர்கள் மேன்மேலும் பகவதநுபவரஸம் வளர்ந்துவரக் கூடிய பக்தியோகத்தை அநுஷ்டிப்பர். அதற்குச் வர்கள் எம்பெருமானுடைய திருவடிகளில் ப்ரபத்தியை அநுஷ்டிப்பர் இவ்வாறு உபாயத்தைச் செய்துமுடித்தபின் எம்பெருமான் தன் பொறுப்பாக நன்மைகளைச் செய்வானென்று நம்பி அவனது கருணை யையே நோக்கிநிற்பர்.

**************************************************

* சேதநனுடைய கர்மங்கள் (1) ஸஞ்சிதம் (2) ப்ராரப்தம் என இருவகைப்படும். பின் ஒரு காலத்தில் பலன் கொடுப்பதற்காகத் தனி யாய்க் குவிந்து மூட்டையாயிருப்பது ஸஞ்சிதமெனப்படும். பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மம் ப்ராரப்தம் எனப்படும். பக்தியோகம் ஸஞ்சிதகர்மங்களை மாத்ரம் போக்கும். ப்ரபத்தி, ஸஞ்சிதகர்மங்களைப் போக்கி, ப்ராரப்தத்தில் நாம் இந்தச் சரீரம் உள்ளவரை பலனை அநுபவிக்கவேண்டிய கர்மங்களைத் தவிர மீதியுள்ள வற்றையும் அனல் பஞ்சை எரிப்பதுபோல் போக்கி விடுகின்றது: ப்ரபத்திக்குப் பிறகு அறியாமல் செய்யும் பாபங்களை இவனிடம் சேராதபடி நீக்கிவிடு கின்றது; காலதேசங்களைக்கொண்டு மனப்பூர்வமாகச் செய்யும்படி நேர்ந்த பாபங்களையும் ப்ராயச்சித்தாதிகளைக்கொண்டு ஒழித்துவிடு கின்றது. (மனப்பூர்வமாய்ச் செய்யும் பாபங்கள் நீங்கும் வகையை கயை 64-வது பாசுரவுரையிற் காண்க). ப்ராயச்சித்தம் செய்யாத முருடருக்கும் இலகுவான தண்டனையைத் தந்து பாபங்களைப் போக்குகின்றது. இச்சரீரம் உள்ளவரையிலும் உள்ள விளம்பத்தைக்கூடப் பொறுக்காது உடனே முக்தி வேண்டு மென்பவனுக்கு உடனேயே ஸகல கர்மங்களையும் போக்கிப் பலனைத் தருகின்றது. என்னே ப்ரபத்தியின் பெருமை !! இத்தகைய பெருமை பக்தியோகத்திற்கு இல்லை. இப்படி ப்ரபத்தியின் வாயிலாக ப்ரபக்க னுடைய ஸகலபாபங்களையும் ஒழித்து ப்ரபந்நனுக்கு எம்பெருமான் அருள்புரிகின்றான். அவனுடைய குளிர்ந்த திருவுள்ளப் போக்கை அறியாதவர்கள் ரஹஸ்யத்ரயத்தின் பொருளை அறியாதவராவர்.

*****************************************************

இந்தக் கர்மசரீரத்துள் இருக்கும் ஜீவாத்மாவுக்கு, உறைக்குள் செருகிய வாளை உபமானமாக வழங்குவதுண்டு. உறை யினுள் இருக்கும் வாள் ஒளிகுன்றித் தன் கார்யத்தைச் செய்ய வல் லமையற்றிருக்கும். அங்ஙனமே ஜீவாத்மா சரீரத்தினுள் இருக்கும் வரை தனக்கு பெற்றுத் தனக்கு இயற்கையாய் உரிய உள்ள ஜ்ஞாநம் சுருங்கப் பரிபூர்ணமான

பகவத்கைங்கர்யத் தைச் செய்யச் சக்தியின்றி நிற்கும். இங்ஙனம் கர்மத்திற்கு வசப்பட் டுக்கிடந்து பின் பக்திப்ரபத்திகளுள் ஒன்றை அநுஷ்டித்த ஜீவாத் மாவுக்கு எம்பெருமான் மோக்ஷத்தை அளிக்கத் திருவுள்ளங்கொண்டு சரீரமாகிய சிறையினின்று அவ்வாத்மாவை வெளியேற்றுகின்றான்.

******************************************************

